Your Friends
In Finance
★ SHABRA ★
Temporarily Shifted To:
Uthayan Office
292/2, Navalar Road,
Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

நிதித்துறையில்
உங்கள் நண்பன்
★ ஷப்றா ★
தற்காலிக முகவரி:
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஸுூ ஆடி ௴ 06 ௳ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ் பிறை 28 (22 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 150

# ஆறு தமிழ்க் குழுக்கள் கொழும்பில் கூடி பேச்சு!

## ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காணும் முயற்சியாம்!

கொழும்பு, ஜூலை 22

ஆறு தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் நேற்று முதல் தடவையாக கொழும்பில் கூடிப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் எழுந்துள்ள பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணும் முயற்சியாகவே இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றதாக கொழும்பில் ஏஜென்ஸிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகிய அமைப்புகள் அல்லாத ஆறு குழுக்களே நேற்று கொழும்பில் கூடி பேசியிருக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ்., ரெலோ, புளொட், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ. பி. டி. பி.] ஆகிய ஆறு அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று

[4ஆம் பக்கம் பார்க்க]

### பாகிஸ்தான் ஷெல்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தயாரிப்பான ''82 எம். எம்'' மோட்டார் ஷெல் ஒன்றே வயாவிளான் பகுதியில் மீட்கப்பட்டது.

(அ-9)



நேற்று விடுவிக்கப்பட்ட 17 பொலிஸாரும் அமர்ந்திருந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: கே. எஸ். ஆர்.)

# விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த 17 பொலீஸார் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மீதான முற்றுகையின் போது சரணடைந்த 17 பொலீஸாரை விடுதலைப் புலிகள் நேற்று பத்திரிகையாளர் முன்னிலையில் வைத்து விடுவித்தனர்.

நேற்று மாலை 6.30 மணி வரையில் கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டத் தலைமையகத்தில்வைத்து இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் திரு. சுப்பிரமணியம் (பேபி), கவிஞர் புதுவை ரட்ணதுரை, முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் அமைப்பாளர் திரு. ராஜன் ஆகியோர் பங்குபற்றினர்.

விடுவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

அ. நவாஸ் (வயது 19)- அக்கரைப்பற்று, எம். ஏ. தாஹீர் (வயது 21)- கிளிநொச்சி, வைரமுத்து வாசன் (வயது 20) மட்டக்களப்பு, எஸ். ரி. எம். மின்ஹாஜ் (வயது 21) -பொத்துவில், சி. சிவயோகராஜா (வயது 28) - கலுவாஞ்சிக்குடி, கே. எல். எம். அஸீஸ் (வயது 21) அம்பாறை, த. ரவீந்திரராஜ (வயது 22) திருமலை, எஸ். வில்சன் (வயது 24) -திருக்கோயில், ரி. பதூர்தீன் (வயது 22) - நிந்தவூர், கி. பற்குணம் (வயது 22)- கொக்கட்டிச்சோலை, எஸ். எம். மொஹமட் வாஹீப் (வயது 21)- அட்டாளைச்சேனை, சீனித்தம்பி பாஸ்கரன் (வயது 21)-களுதாவளை,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸில் சேரமாட்டோம்; புலிகளுடன் இணைவோம்

### விடுதலையானவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 22

'இனி தொடர்ந்து நாம் பொலீஸில் சேரமாட்டோம். விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவோம்,.

-இவ்வாறுகூறினார் நேற்று விடுவிக்கப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள்களில் ஒருவரான த. ரவீந்திரராஜ். இவர் திருகோணமலையைச்சேர்ந்தவர்.

விடுதலைப் புலிகளின் காவலில் இருந்தபோது அவர்கள் தங்களை நன்றாகக் கவனித்ததாகவும் —

உணவு, உடை உட்பட சகல வசதிகளும் தந்து நன்கு பராமரித்தார்கள் என்றும் அவர் மேலும் சொன்னார்.

[உ-9]

## புலிகளுக்கு எதிராக நாம் ஆயுதம் தூக்கத் தயாரில்லை

### அதனாலேயே சரணடைந்தோம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்த நாம் தயாரில்லை. அதன் காரணமாகவே நாம் சரணடைந்தோம்.

-இவ்வாறு நேற்று விடுவிக்கப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள்களில் ஒருவரான ரி. பதூர்தீன் தெரிவித்தார்.

''நாம் அனைவரும் பொலீஸில் சேர்ந்து சுமார் 3 முதல் 6 மாதங்கள் வரையே இருக்கும். கடந்த 13 ஆம் திகதி எமது பொலீஸ் நிலையத்துக்கு வந்த இராணுவத்தினர் எமது ஆயுதங்களை

(3 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

22- 7- 90
ஞாயிற்றுக்கிழமை ஆடி 06
சுபநேரம்!
9-01— 10-31
இராகுகாலம்
04-31—06-01

சரணடைந்தோரைக் கொன்றதாக

# அரசு கூறுவது பொய் என்பதை நிருபிக்கவே பொலீஸார் விடுவிப்பு

## யோகி நேற்றுத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

எம்மிடம் சரணடைந்தவர்களை நாம் கொன்றுவிட்டோம் என்று இலங்கை அரசு பொய்கூறி வருகிறது. அது உண்மையில்லை, தவறானது என்று உலகுக்கு உணர்த்தவே இப்போது நாம் உங்களை விடுவிக்கிறோம். எம்மிடம் சரணடைந்த ஏனைய பொலீஸாரையும் நாம் படிப்படியாக விடுவிப்போம்.

இவ்வாறு நேற்று பொலீஸார் விடுவிப்பு நிகழ்ச்சியின்போது பேசிய விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

எம்முடன் நடந்த சண்டையில் பலர் இறந்து விட்டார்கள் ஆயினும் இலங்கை அரசு நாம் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரைக் கைது செய்துவிட்டோம் என்றும், அவர்களைக் கொன்றுவிட்டோம் என்றும் கூறி வருகிறது—

ஆனால் எம்மிடம் சரணடைந்த பொலீஸார் எத்தனை பேர் என்பதை நாம் இன்னும் சரியாகக் கணக்கிட முடியவில்லை. சரணடைந்த பொலீஸார் அனைவரும் விடுவிக்கப்படுவர். தற்போது விடுவிக்கப்படுவோர் தங்களது சொந்த இடங்களுக்கு செல்ல வசதி செய்யப்படும்—

நாம் பொலீஸாரை விடுவித்தது மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே பத்திரிகையாளர்கள் முன்னால் விடுவிக்கிறோம் — என்று அவர் சொன்னார்.

(அ-9)

நாளாந்த நிகழ்ச்சியாக

# யாழ். நகரில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ் நகரில் நாளாந்த நிகழ்ச்சியாக நடைபெற்று வரும் விமானக் குண்டுவீச்சு நேற்றும் காலையிலேயே ஆரம்பமாகிவிட்டது!

காலை 7.15 மணிமுதல் 9.45 மணிவரை சிலநிமிட இடைவேளைகளுடன் விட்டு விட்டு அந்த நாளாந்த நிகழ்ச்சி இடம்பெற்றது!!

மொத்தமாக வந்த நான்கு விமானங்களில் மூன்று குண்டுகளைப்பொழிய, ஒரு விமானம் கோட்டைப் பகுதியில் பொதிகளைப் போடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது.

நேற்றைய தாக்குதல்கள் அதிகளவில் கோட்டையைச் சூழவே நடத்தப்பட்டன. பொலீஸ் பகுதி, பண்ணைப் பாலம், வீரசிங்கம் மண்டபம் போன்ற பகுதிகளிலேயே அதிகமான குண்டுகள் விழுந்து வெடித்ததாகத் தெரியவந்தது,

சின்னக்கடைப் பகுதியிலும், ஆரியகுளம் சந்திப் பகுதியிலும் மோட்டார் ஷெல்கள் அடிக்கப்பட்டன.

[ஒ-10-3-5]

## நேற்றைய குண்டு வீச்சில் யாழ். ஆஸ்பத்திரியும் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

நேற்று நடத்தப்பட்டவிமானக் குண்டு வீச்சின் பேபது யாழ். ஆஸ்பத்திரியின் 12 ஆம் இலக்க வார்ட் சேதமடைந்தது.

மணிக்கூட்டு வீதியில் வெடித்த குண்டின் ''பெரும்'' சிதறல் ஒன்று வந்து விழ்ந்ததிலேயே அந்த வார்ட்டின் கூரை சேதமுற்றது. ஆஸ்பத்திரியின் வார்ட் கண்ணாடிகளும் உடைந்து நொருங்கின.

வார்ட்டில் விழுந்த குண்டுச் சிதறல் சுமார் ஓர் அடி நீளமான உலோகமாகும். அதில் ''92'' என்ற இலக்கம் பொறிக்கப்பட்டிருந்தது.

[ஒ-3-5-10]



''பவள்'' கவச வாகனத்தைப் பொதுமக்கள் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்: கே. எஸ். ஆர்.)

விடுதலைப் புலிகள் மீட்ட

# 'பவள்' கவச வாகனம் மக்கள் பார்வைக்கு!

கடந்த மாதம் 21ஆம் திகதி மன்னார் கொண்டச்சி(கஜபாம்) முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது அவர்களினால் ஸ்ரீலங்கா இராணுவப் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ''பவள்'' கவச வாகனம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

கோண்டாவிலில் உள்ள விடு

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



டவுணிலை உள்ள சனங்களை நடுச்சாமத்திலை எழுப்பி விடுறது உந்த பாகிஸ்தான் காரன்ரை ஷெல் தானோ......!

# ஜீ. சி. ஈ. (உயர்தரப்) பரீட்சை வடக்கு, கிழக்கில் ஒத்திவைப்பு

## அமைச்சர் லலித் நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, ஜலை 22

ஜீ.சி.ஈ (உயர்தர) பரீட்சை வடக்கு, கிழக்கில் திட்டமிட்டபடி நடைபெறாது. அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவருக்கு தனியான பரீட்சை பின்னர் நடத்தப்படும்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி இந்த அறிவிப்பை விடுத்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத்தார். ஏனைய மாகாணங்களில் உள்ள மாணவர்களுக்குத் திட்டமிட்டபடி அடுத்த மாதம் ஜீ சி ஈ. (உயர்தரப்) பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

(உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோவில்களுக்குத் தேவையான பூசைமணி, அசையாமணி, திருவாசி குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம், கும்பச் செம்பு, அடுக்குத்தீபம், பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருள்களும், எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். லிம்ல்ஸ் 297, K.K.S. வீதி தற்போது 76/2 நாவலர் வீதி சோனகதெரு, யாழ்ப்பாணம் (13789)

பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சேவியர், 249, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (13793

கண்ணாடிஅலுமாரி, மேசை, கதிரை, குளிர்சாதனப் பெட்டி, புதிய ஸ்பெஸ்ரஸ் சீற், பனைமரம், தீராந்தி, புதிய நிலைகள், கதவுகள், ஓடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 195, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (13781)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எல்லா வகையான இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (13794)

இறைச்சிக்கு உகந்த நல்ல இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு. விலைகுறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா அன் பிறதர்ஸ். பிரம்படி லேன், கொக்குவில். (சி/5277)

## தவறிவிட்டது

சபாபதி செல்வராசா கச்சநாவலடி சுன்னாகம் என்பவரின் 622402386 V இல அடையாளஅட்டை 19. 07 90 சுன்னாகத்தில் இருந்து சாவகச்சேரிக்கு இடையில் வண்ணாத்திப்பாலத்தடியில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள்கீழ்காணும்முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நாதன் வேக்ஸ்சொப் கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13787)

## 31ஆம் நாள் இதய அஞ்சலி



திருமதி பிலோமினா (தேவிகா) யேசுதாஸன்

அன்னை மடியில்: 04-05-1959

ஆண்டவன் மடியில்: 22-06-1990

இறைவனது திருவடியில்
மாலையாகிவிட்ட பூ
மலரே
குலவிளக்காய் எம்முடனே
குடியிருப்பாய் தினம்
தினமே!

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

பெரியமாவடி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(13682)

## வாகனம் புரண்டு பலர் காயம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 22 பயணிகளை ஏற்றிச்சென்ற வாகனம் தடம் புரண்டது. அதில் பயணம் செய்த பலர் காயமுற்றனர்.

இச்சம்பவம் எழுதுமட்டுவாழ் சந்திக்கு சமீபமாக இடம் பெற்றது. காயமடைந்தோர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். (இ-117)

## தலைமறைவு

பச்சிலைப்பள்ளி, ஜூலை22 திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்ததாகக் கூறி முகமாலை தேவாலய முகாமில் தங்கியிருந்தவர் அங்கு நின்ற சைக்கிள், உணவுப்பொருள்கள், லொறி ஒன்றில் இருந்த டீசல் ஆகியவற்றுடன் தலைமறைவாகிவிட்டார் என்று கூறப்படுகிறது. முகமாலை சிற்றூர் அவையினர் இவரைத்தேடி வருகின்றனர். (இ-117)

# தீவிரவாதக் குழுக்களுடன் மீண்டும் பேச்சு வேண்டும்

## சபையில் சிறிமா கோரிக்கை

கொழும்பு, ஜூலை 22 நாடாளுமன்றத்துக்கு வந்துள்ள தமிழர் தீவிரவாதக் குழுக்களுடன் அரசாங்கம் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பேசுகையில் கடந்த 20 ஆண்டுகளாக நாட்டில் நிலவிவரும் சிவில் யுத்த நிலைமையை நீக்க, விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்தை தோற்கடிக்க வேண்டியது அவசியமாகின்றது என்று சொன்னார்.

அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக 117 எம்.பிக்கள் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் அரசுடன் சேர்ந்து வாக்களித்தனர்.

ஐக்கிய சோஷலிச அணி எம்.பியான வாசுதேவ நாணயக்கார மட்டுமே எதிர்த்து வாக்களித்தார்.

சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்கள் ஐக்கிய முன்னணி, எம்.பிக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (இ-எ)

## வீடமைப்பு ஊழியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22 முல்லைத்தீவு மாவட்ட தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கு ஜூலைமாத சம்பள முற்பணம் வழங்குவதற்கான ஒழுங்கினை மேற்கொள்வது மற்றும் அலுவலக நடவடிக்கைகள் குறித்து இம்மாதம் 23ஆம் திகதி ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

அன்று காலை 9-30 மணிக்கு மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரி. எம். விஜயகுமாரின் கந்தர்மட இல்லத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் ஊழியர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. (அ-எ)

## நல்லூர் உற்சவம்:

# கோவில்பகுதியில் கடைகள் திறக்க அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 22 நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உச்சவத்தை முன்னிட்டு கோவில் பகுதியில் கடைகள்திறக்க இம்முறை அனுமதிக்கப்படமாட்டாது.

இதனை யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். திருவிழாக்காலங்களில் மக்கள் கூடி நிற்பதை தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27 ஆம்திகதி ஆரம்பமாகிறது. (இ 10)

## ஓராண்டு நினைவலைகள்



# லெப்ரினன்ட் "ஆஷா"

[வல்லிபுரம் விமலேஸ்வரன்]

| தாயகத் தாய் மடியில்: | தமிழீழத்தாய் விடிவில்: |
|---|---|
| 11 - 01 - 1969 | 22 - 07 - 1989 |

முடிசார்ந்த மன்னருடன் மகான்கள் முனிவர்களும்
முடியாமல் வாழ்ந்த கதை மண்ணுலகில் இல்லையடா
ஏன் பிறந்தோம்? ஏன் மடிந்தோம்? என்று தெரியாமல்
பிடிசாம்பல் ஆகின்ற பேடிகளும் வாழுமிங்கே

இருவிழி துயிலாமல் இமையது மூடாமல்
இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து நின்றவனே நீ
இலையாக விழுந்து சருகாகவில்லையடா
விதையாக விழுந்து விருட்சமானவனே விமலேஸ்வரா!

ஆஷா! எங்கள் ஈசா! உனக்கொரு சாவா? – உன்
சாவும் ஒரு சரித்திரம் படைக்குமடா – எம்
சந்ததியும் உன் புகழ் சொல்லுமடா–தமிழீழத்தில்
உன் தாயகத்திற்கும் தனிப்பெருமையுண்டல்லவா!

உறையாமல் குருதி உன் மீது ஓடியும் - தாயே
உன் தாகம் இன்னும்தான் தீரலையா?
உனை மீட்கத்தானே விடுதலைப் போராட்டம்
ஒரு நாள் மலரும் "தமிழீழத் தாயகம்"

பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்,
மருமக்கள், மைத்துனர்கள், நண்பர்கள்,

"தாயகம்"
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(13714)

# இடமாற்றம்

யாழ்/ ராணி சினிமாவிற்கு அருகில் இல: 06, ஜூபிலி பசாரில் இயங்கிவந்த டயா வோச் வேக்ஸ் என்னும் ஸ்தாபனம் பாதுகாப்பு காரணமாக இல. 6, பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

(13679)

# சீயோன் தேவாலயம்

24, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## ஆராதிப்போர் கவனத்திற்கு


தற்போது ஆராதனை நடைபெறும் வீடுகளும் நேரங்களும்

| | | |
|---|---|---|
| 30, கோயில் வீதி, யாழ்ப்பாணம் | — | காலை 9.00 மணி |
| ஏலீம் சிறுவர் இல்லம், மானிப்பாய் | — | காலை 9 00 மணி |
| திருமதி துரைராஜசிங்கம், உரும்பராய் | — | காலை 10.00 மணி |
| திரு. மகாலிங்கம், மயிலங்காடு | — | காலை 8.45 மணி |
| திருமதி எலிசம்மா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு | — | காலை 7.30 மணி |
| திரு. சிற்றம்பலம், கோப்பாய் வடக்கு | — | மாலை 4.00 மணி |
| திருமதி ப. கமலாம்பிகை, மீசாலை தெற்கு | — | மாலை 4 00 மணி |
| திரு. J. நிக்சன், நாவற்குழி | — | காலை 9.00 மணி |
| திரு. P. கனகு, புத்தூர் கிழக்கு | — | காலை 9.00 மணி |
| திரு. மார்க்கண்டு, ஆவரங்கால் | — | மாலை 4.00 மணி |

— போதகர்

[13795]

# 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## து. பஞ்சலிங்கம் (மனோமாஸ்டர்)

| தோற்றம்:- | அழிப்பு:- |
|---|---|
| 09-04 1956 | 22-07-1984 |

வேலியே பயிரை மேய்வது உண்டு
மீன்களுக்கு மீன்களே பலியாவதும் உண்டு
இங்கே விடுதலைப் பூக்களின் குருதியால் தேசமே
நனைகின்றது
மக்களே விடுதலையின் பெயருக்கு
இவன் இரத்தமும் அஞ்சலியா?

குடும்பத்தினர்,

ஊர்மக்கள், உறவினர், நண்ப கள்.

கொம்மந்தறை,
[illegible]

(13791)

# முக்கிய அறிவித்தல்

கீழ்க்காணும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுடனான [A/L 90-91 வகுப்புகள்] ஓர் கலந்துரையாடலினை பொருளியல் ஆசிரியர் வரதராஜன் மேற்கொள்ளவிருக்கின்றார்.

1. KEEN
2. BECON
3. பொருளியல் கல்வி நிலையம்

இடம்: மங்கயற்கரசி வித்தியாலயம் நல்லூர்

காலம்: 23-07-90 திங்கள் காலை 9.00

அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்கவும்

[சி-5281]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## மாணிக்கவாசகர் கதிர்காமநாதன்

(பபா)

(விதிகள் அபிவிருத்தி அதிகாரசபை தொழில் நுட்பவியலாளர்)

தோற்றம்:- 22-04-1947 மறைவு:- 13-08-1988

திதி:- 22-07-1990

இதய தீபமே! தாங்கள் மறைந்து ஈராண்டுகள் சென்றும் எமது இதயக் குமுறல்கள் ஓயவில்லையே! உம் நினைவலைகள் எம் உள்ளங்களில் பெரும் புயலாக வீசுகின்றனவே! பாரினில் எம்மைப் பாங்காக வாழவைத்த பாசத்தந்தையே, அன்புக் கணவனே, ஆருயிர் மைந்தனே உம்மை இழந்து பரிதவிக்கின்றோம். தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், தாய், தந்தை,
சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்.

(13759)

# ஓராண்டு நினைவஞ்சலி



திரு.

## செல்லையா கணபதிப்பிள்ளை

(யாழ்ப்பாணத்து உடுப்பிட்டியூர் விஸ்வப்பிரம்ம குலத் திலகரும், ஈழத்துப் பிரபல்யம் வாய்ந்த சைவத்தலங்களின் தேர்களையமைத்துக் கொடுத்த கலாகேசரியும், பரமராஜா ரேடிங்கம்பனி உரிமையாளரும்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14 - 08 - 1902 | 02 - 08 - 1989 |

திதி: 22 — 07 — 1990

எமதருமைத் தந்தையே! அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்தாளாக்கி பார்தனில் பேருடனும் புகழுடனும் இன்று நாம் வாழக் காரணமாயிருந்த எம் தெய்வமே! எங்களை நீங்கள் விட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்து விட்டதையா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்புப் பிள்ளைகள்,
க. பரமசாமி, க. நமசிவாயம்.

இமையாணன்,
உடுப்பிட்டி.

[13773]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### எலும்புக் கூடுகளை பரிசோதிக்கவா?

இலங்கையின் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக நேரில் கண்டறிவதற்கு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இலங்கை வருமாம்.

எப்போது தெரியுமா? எதிர்வரும் செப்டம்பர்மாதம் இரண்டாவது வாரத்தில்!

அதாவது இன்னும் ஐம்பத்துநான்கு நாட்களின் பின்னர், வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கு என்ன ''நடந்தது'' என்பதைப் பார்க்க இந்தியாவிலிருந்து ஒரு எம். பிக்கள் தூதுக்குழு வருமாம்! இதனைப் போல வேடிக்கை நிறைந்த விடயம் உலகில் வேறு எதுவும் இருக்கமுடியாது!!

மணித்தியாலத்துக்கு மணித்தியாலம், எவ்வாறு நெருக்கடி நிலைமை மென்மேலும் மோசமாகிறது; அரசாங்கப் படைகளின் தாக்குதல்கள் எவ்வாறு வீச்சும், வேகமும் அடைகின்றன; அவற்றின் விளைவுகள் அப்பாவித் தமிழ் மக்களை எவ்வாறு கொடூரப்படுத்துகின்றன; உணவு இல்லாமல் சாவோர் ஒருபுறம், மருந்தில்லாமல் மடிவோர் மறுபுறம், ஆயுதப் படைகளின் புதுப்புதுவிதப் பயங்கர ஆயுதங்களால் இறப்போர் இன்னொருபுறம் என்று எத்தனை தமிழர்கள் மணிக்கு மணி மடிகிறார்கள்— என்பது எல்லாம் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்குத் தான் தெரியும்.

உடனடியாக வரமுடியாத இவர்கள் இன்னும் 1,296 மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் வந்து இங்கு எதனைப் பார்க்கப்போகிறார்கள்? இலங்கை அரசுப் படைகளின் தாக்குதல்களால், பட்டினியால், நோயால், செத்தொழிந்த தமிழ் மக்களின் எலும்புக் கூடுகளை எடுத்துப் பரிசோதனை செய்யவா இங்கு வரப்போகிறார்கள்? குண்டுகளும், ஷெல்களும் அழித்த இடிபாடுகளையும், அழிந்த நகரங்களையும் படம்பிடித்துச் சரித்திரப் புத்தகம் எழுதவா அவர்கள் வரப் போகிறார்கள்?

தமிழர்கள் படும் அவலங்களை, அனுபவிக்கும் இன்னல்களை, தமிழ்ப்பகுதியில் நடக்கும் உயிர்இழப்புகளை, உடைமை நாசங்களை பார்க்கவேண்டுமானால் இந்திய எம். பிக்கள் ஒரு வாரத்திற்குள் வரவேண்டும். அதுவும் நன்னிச்சையான, சுதந்திரமான அவதானிப்புக் குழுவாக வரவேண்டும்.

வருவதோடும், கேட்பதோடும், பார்ப்பதோடும் நின்றுவிடாது, தாங்கள் பார்த்தவற்றை, கேட்ட நிகழ்வுகளை மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் பக்கம் சாராமல்வெளிஉலகத்துக்கு சொல்ல வேண்டும் தமிழ் மக்கள் அதனையே அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள். வேறு எதனையும் அல்ல.

இலங்கை அரசாங்கத்தின் விருந்தாளிகளாக எந்த வெளிநாட்டுக் குழுவும் வடக்கு, கிழக்குக்குவரவேண்டியதில்லை. வரவும் வேண்டாம்.

1983 ஆம் ஆண்டில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது அப்போதைய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவை உடனே அனுப்பி நிலைமையைநேரில்அறிந்து வரச் செய்தவர் அன்னை இந்திரா. அதே போல இன்றைய இந்திய அரசும் விசேட குழுவொன்றை உடனே அனுப்பி நிகழ்வுகளைப் பார்க்கட்டும்; நிலைமையை சுதந்திரமாகப் படிக்கட்டும்; அதன் பின் வெளிநாடுகளுக்குச் சொல்லட்டும். அந்தக்குழுவில் தமிழரும் இடம் பெறவேண்டியது அவசியம்.

இல்லையேல் எந்தக் குழுவும் இங்கு வந்து எதனையும் பெரிதாகச் சாதித்து விடப் போவதில்லை, இன்றே செய்க அதுவும் நன்றே செய்க என்பதை மறந்து விடலாகாது.

---

வவுனியா களஞ்சியத்திலிருந்து அரிசி எடுத்துவர

# உயர் அதிகாரி அனுமதித்தாலும் காவல் நிற்கும் சிப்பாய்கள் தடங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வவுனியா நகரில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருள்களை எடுப்பதற்கு களஞ்சியத்தில் காவல் நிற்கும் சிப்பாய்கள் தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்துள்ள உணவுக் களஞ்சியத்தில் உள்ள அரிசி, மா ஆகியவற்றை எடுக்க உயர் அதிகாரிகள் அனுமதி வழங்குகிறார்கள்.

அந்த அனுமதியுடன் உள்ளே சென்றால் களஞ்சியத்தில் காவல் நிற்கும் சிப்பாய்கள் அதற்குத் தடையாக இருக்கிறார்களாம்.

மூன்று, நான்கு தடவைகள் சென்று தான் ஒரு தடவை பொருளைப் பெறவேண்டியுள்ளதாம்.

கடந்த திங்கட்கிழமை மூன்று ப. நோ. கூ. சங்க லொறிகள் களஞ்சியத்துக்கு உணவு எடுக்கச் சென்றன. அப்போது சிப்பாய்கள் ''15 நிமிடத்தில் எடுக்கவேண்டும். அந்தப் பகுதியில் இருந்து எம்மை நோக்கிச் சூடு வருகிறது'' என்று கூறினார்கள். ஒரு லொறியில் 15 மூடை மா ஏற்றியவுடன் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

லொறிக்காரர் 15 மூடை மாவுடன் திரும்பிவிட்டனர்.

இதைத் தொடர்ந்து அங்கு உணவு எடுக்கச் செல்ல அவர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். (இ-3-5)

## மானிப்பாயில் ஆஸ்பத்திரிக்கு தொடர்ச்சியாக மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மானிப்பாயில் இயங்கும் யாழ். ஆஸ்பத்திரிப் பிரிவுக்கு வெள்ளிமுதல்தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டதை அடுத்து ஆஸ்பத்திரிப் பிரிவின் சகல பகுதிகளுக்கும் மானிப்பாய் மெமோறியலில் இருந்த ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக ஜெனரேட்டர் மூலம் முழு நேர மின்சாரம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து, ஆஸ்பத்திரி நிர்வாகம் இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு ஆஸ்பத்திரிக்குத் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

அதனை அடுத்து வெள்ளி நண்பகலில் இருந்து யாழ். வைத்தியசாலைப் பிரிவுக்கு சுன்னாகம் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ-10)

## சுறுசுறுப்பாக, உறுதியுடன் சிற்றாரவை செயற்படட்டும்

### உறுப்பினர் மத்தியில் ஆஞ்சநேயர்

யாழ்ப்பாணம், ஜூலை 22

தமிழீழ மக்களின் உயிருக்கும், உடைமைக்கும்உத்தரவாதம் அளிப்பதற்கு சிற்றாரவைகள் சுறுசுறுப்பாகவும், உறுதியுடனும் செயற்படவேண்டும்.

வட்டஅவை உறுப்பினர்மத்தியில் பேசுகையில் அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஒவ்வொரு கிராம மக்களுடனும் சிற்றாரவை உறுப்பினர்கள் கலந்துரையாடி, நிலைமையை எடுத்துக்கூறி மீட்பு நிதி சேர்ப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். சிற்றாரவைக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும் என்றார்.

போராளிகள் இறக்கும் பொழுது அவர்களின் இறுதி அஞ்சலிகளில்கலந்து கொண்டு மற்றவர்களுக்கு முன்னோடிகளாக சிற்றாரவையினர் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ)

## தமிழருக்கு நீதிவேண்டி பிரார்த்தனையும் நோன்பும்

### இன்றுமுதல்ஒருவாரகாலம்நடக்கும்

கொழும்புத்துறை, ஜூலை 22

தமிழருக்கு நீதி வேண்டி ''ஓம் சாந்தி'' பிரார்த்தனையும், நோன்பும் நடத்த முடிவாகி உள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஏழுநாட்களுக்குத் தொடர்ச்சியாக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இந்தப் பிரார்த்தனையை இலங்கை இந்து இளைஞர் பேரவையின் துணைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் அனுஷ்டிப்பார்,

மக்கள் அவலம் நீங்கவும், பட்டினி, பஞ்சம் நீங்கவும் அமைதி ஏற்படவும் ''ஓம் சாந்தி'' பிரார்த்தனை அனுஷ்டிக்கப்படும்.

குறித்த ஒரு வாரத்தில் புலால் உண்பதைத் தவிர்த்து பசுப் பாதுகாப்பைப் பேணுமாறும் ஆலயங்களில் நோன்புடன் ''ஓம் சாந்தி'' பிரார்த்தனை நடத்துமாறும் சகல சைவ சமயிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தமிழருக்கு நீதி வேண்டி நடத்தப்படும் இந்தப் பிரார்த்தனையின்போது நோன்பிருத்தல் மேலும் நற்பயன் விளைவிக்கும் எனக் கருதப்படுகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்நேற்று முன்தினம் நடைபெற்ற பல இந்துசமய அமைப்புக்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்திலேயே ஓம் சாந்திப் பிரார்த்தனை நடத்த ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. (அ-30)

தூத்துகுடி வழியாக

## ரூ.75 கோடி ஹெரோயின் இலங்கைக்கு கடத்த முயற்சி!

### இரண்டு பேர் கைதாகினர்

சென்னை ஜூலை 22

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு இரண்டு உள்ளூர் படகுகளில் கடத்திச் செல்லப்பட்ட ஹெரோயின் போதை வஸ்தை தூத்துக்குடி சுங்க அதிகாரிகள் வழி மறித்துக் கைப்பற்றினர்

33 கிலோ எடையுள்ள இந்த போதை வஸ்தின் பெறுமதி வெளிச்சந்தை மதிப்பின்படி இலங்கைப்பணத்தில சுமார் 75 கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

படகுகளில் பயணம் செய்த ஒரு இலங்கையரும் தூத்துக்குடி வாசி ஒருவரும் அதிகாரிகளால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [உ-எ]

## உள்நாட்டுத் தபால்களே இங்கு அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உள்நாட்டுத் தபால்களே அனுப்பப்பட்டன. வெளிநாட்டுத் தபால்கள் அனுப்பப்படவில்லை.

மதவாச்சியில் இருந்து நேற்றுக் காலை வந்து சேர்ந்த வாகன அணியில் அனுப்பப்பட்ட 66 தபால் பொதிகளிலும் உள்நாட்டுத் தபால்களே அடங்கியிருந்தன. வெளிநாட்டுத் தபால்கள் அனுப்பவில்லை.

வந்து சேர்ந்த தபால்களை விநியோகிக்கும் வேலைகள் திங்கட்கிழமையே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

## போக்குவரத்துச் சபைகள் நாளை கலைக்கப்படும்

அனைத்துப் போக்குவரத்துச் சபைகளும் நாளை திங்கட்கிழமை முதல் கலைக்கப்படும்.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸ் நேற்று வெளியிட்டார்.

போக்குவரத்துச்சபைகளை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தின்கீழ் அவை கலைக்கப்படுவதாகவும்— மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக ஆலணக்குழு ஒன்றும் நியமிக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார். [உ-எ]

## ஜீ. சி. ஈ (சா.த) பரீட்சை முடிவுகள் இவ்வாரத்தில்

கொழும்பு, ஜூலை 22

ஜீ.சி.ஈ சாதாரணதரப்பத்திரப் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் எழுத்து மூலமான பரீட்சைகளின் பெறுபேறுகளையே பெறுவர்.

அம்மாகாணத்தில் செயல்முறைப் பரீட்சைகள் நடத்தப்படவில்லை.

தபால் மூலம் பெறுபேறுகளை அனுப்பி வைக்கக் கூடிய உகந்த சூழ்நிலை அப்பகுதியில் நிலவவில்லை.

ஆகவே வேறு வழி முறைகளில் அவற்றை அனுப்பி வைக்க வேண்டும் — என்றார். (உ-எ)

## சிபிளேன்

கடந்த புதன் கிழமை வடமராட்சிப் பகுதி எங்கும் பகலிருந்து நள்ளிரவு வரை சிபிளேன் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அடிக்கடி பொம்மர், அவ்ரோ விமானங்களும் வந்து போய்க்கொண்டிருந்தன. (இ-160)

## ரயில்வே ஊழியர் கூட்டம்

இலங்கை ரயில்வேப் பகுதியைச்சேர்ந்த இடம் பெயர்ந்த ஊழியர்கள் அனைவரையும் வட பகுதி ரயில்வே ஊழியர்களையும் நாளை திங்கட்கிழமை காலை யாழ்.ரயில்நிலையத்தில் ஒன்று கூடும்படி கேட்கப்பட்டுள்ளது. (இ-10)

## விதைநெல் விற்க வேண்டாம்: விவசாயிகளுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

பெரும் போகச் செய்கைக்காக சேமித்து வைத்திருக்கும் விதைநெல்லை விற்பனை செய்ய வேண்டாம் என கமத் தொழில் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு.ஏ.சி. சிவசாமி யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விதைநெல்லைப் கொண்டு வர முடியாது என்றும்— ஆகவே பணத்திற்கு ஆசைப்பட்டு விதைநெல்லை விற்பனை செய்யாமல் அதனைப் பாதுகாத்து வைக்குமாறும் அவர் கோரி உள்ளார். [இ-10]

## மீண்டும் ஹெல்மட்

கொழும்பு, ஜூலை 22

மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும் பின்னால் அமர்ந்து செல்பவர்களும் ஹெல்மட் அணிந்து செல்லும் உத்தரவு அக்டோபர் முதலாம் திகதியில் இருந்து மீண்டும் அமுலுக்கு வருகிறது.

இதனை பொலீஸ் தலைமையகம் நேற்று அறிவித்தது. (உ-எ)

## லியோகழக கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி லியோகழக அங்கத்தவர்கள் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும். (இ)

## தமிழ் கட்சிகளை ஒன்றாகச் சந்திக்க சிறிமா முயற்சி!

சகல தமிழ்க் கட்சிகளையும் ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஒரே இடத்தில் சந்தித்துப் பேச சுதந்திரக் கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதற்காக ஒவ்வொரு தமிழ்க் குழுக்களுடனும் அவர் கொழும்பில் தனித்தனியாகப் பேச்சு நடத்தி வருவதாகவும் அறியப்படுகிறது.

புளொட், ஈ. என். டி. எல். எப்., ஈ. பி ஆர். எல். எப்., ரெலோ, போன்ற அமைப்புகளுடன் இது தொடர்பாக அவர் ஏற்கனவே தனித்தனியாக பேச்சு நடத்தியிருப்பதாகத் தெரிய வந்தது (உ)

## உலக நாடுகள் கவனத்துக்கு அரசின் பயங்கரவாதம்

### அன்னையர் முன்னணி கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 22

எமது மக்களுக்கு எதிரான அரசபயங்கரவாதநடவடிக்கைகள்யாவும்உலகநாடுகளின் கவனத்துக்குக்கொண்டு வரப்பட வேண்டும்.

கோண்டாவில் மேற்கு இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியின் கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தமிழீழப் பிரதேசமெங்கும் ஸ்ரீலங்கா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் பற்றியும், அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலை பற்றியும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

கலந்துரையாடல் அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி சரஸ்வதி கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

தற்சமயம் அம்பாறை மாவட்டத்திலும் ஏனைய கிழக்குப் பகுதிகளிலும் சிங்கள இராணுவம் மேற்கொண்டு வரும் மனிதாபிமானமற்ற, சண்டித்தனமான தாக்குதல்களையும், இனப்படுகொலைகளையும் கண்டிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்பேசும்மக்கள்மீதுஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கண்டித்தும் இனிவரும் நெருக்கடியான காலத்தில் மக்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அடுத்த கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். [இ]

## இறக்குமதி

கொழும்பு, ஜூலை 22

மூன்று ஆண்டுகளும் அதற்குக்குறைவான காலமும் பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## விடுதலை ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓ. எஸ். ரபாயுதீன் (வயது 19)- அம்பாறை, ஏ. ஆர்.பைசல் ரகுமான் (வயது 21)- அம்பாறை, எம். வரதராஜன் (வயது 23)- குருக்கள் மடம் மட்டக்களப்பு, துரைராஜா மனோகரன் (வயது22) வவுனியா, எம். ஐ. எல்.செய்யத் சாலிக்(வயது20)-அட்டாளைச்சேனை. (உ-9)

## புலிகளுக்கு ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் சென்றனர். எம்மையும் தமது முகாமுக்கு வந்துவிடும்படி அழைத்தனர். ஆனால் நாம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதம் தூக்க விரும்பாத காரணத்தினால் பொலீஸ் நிலையத்திலேயே தங்கினோம்.

14 ஆம் திகதி அதிகாலை கிளிநொச்சி முகாம் தாக்கப்பட்டபோது நாம் சரணடைந்தோம் -என்று மேலும் அவர் சொன்னார். (உ-9)

## 'பவள்' கவச ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட தலைமையகத்தில் இந்த வாகனம் நிறுத்தப்பட்டிருந்த போது பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கூடி நின்று அதனைப் பார்வையிட்டனர்.

பின்னர் கொண்டச்சி முகாம் மீதான தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட ''வீடியோ'' படம் பத்திரிகையாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டது.

கொண்டச்சி முகாம் மீது கடந்த ஜூன் 21 ஆம் திகதி விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் போது அந்த முகாம் புலிகள் வசம் வீழ்ந்ததோடு ஏழுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர் என்பதும்-

பெரும் அளவிலான ஆயுதங்கள் புலிகளால்மீட்கப்பட்டன என்பதும் தெரிந்ததே. (உ-9)

## தமிழ்க் குழுக்களை இனி பேச்சுக்கு அழைத்தால்......!

கொழும்பு, ஜூலை 22

''தமிழ்க் குழுக்களை இனிமேல் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கும் போது கிறின் லண்ட் ஹோட்டலுக்கு அல்லது சரஸ்வதி லொட்ஜுக்குத் தான் வரவழைப்போம்.''

-இப்படி நாடாளுமன்றத்தில் கூறினார் அமைச்சர் ரஞ்சன்

பேச்சுவார்த்தைக்கு என காட்டுக்குள் இருந்து புலிகளை அழைத்து வந்து கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்க வைத்து பெரும் செலவில் உபசரித்தது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கண்டனங்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு சொன்னார். (உ)

## அனைத்துக்கட்சி குழு பற்றி ரஞ்சன் வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஜூலை 22

இந்தியா சென்ற நாடாளுமன்றத் தூதுக் குழுவில் உள்ள ஆண்கள் பிரம்மச்சாரிகள் குழுவில் இடம்பெற்ற பெண்மணி விதவை சபாநாயகர் மத்தியஸ்ரகச் சென்றுள்ளார் திருமதி புலேந்திரன் நடு திரும்பிய பின் அவர் எப்படிக் கவனிக்கப்பட்டார் என்பதை விசாரித்தறிய வேண்டும்.

- இப்படி கடந்த வெள்ளி இரவு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் ரஞ்சன் பலத்த சிரிப்புக்கு மத்தியில் கூறினார். [உ]

விடுதலைப் புலிகளுக்குப் பயந்து

## ஈரோஸ் எம்.பிக்கள் வெளிநாட்டுக்கு ஓடமுயற்சி!

### நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

கொழும்பு ஜூலை 22

விடுதலைப் புலிகளின் ஆத்திரத்துக்குப் பயந்து ஈரோஸ் எம் பிக்கள் நாட்டை விட்டு ஓட முற்பட்டுள்ளார்கள் என அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா வெள்ளியிரவு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

எல்.ரி.ரி.ஈயின் கோபத்தில் இருந்து தப்புவதற்காக ஈரோஸ் எம். பிக்கள் நாட்டை விட்டுஓட முற்பட்டுள்ளார்கள்.

இம் மாதம் 25 ஆம் திகதிக்குள் அவர்கள்வெளியேறத் திட்டமிட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கை கிடைத்துள்ளது.

இதற்காக பல தூதரகங்களை அவர்கள் நாடியதாக அறிகிறேன்.

இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ)

## இ. காங்கிரஸ் எம்.பிக்களுடன் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 22

இலங்கை நாடாளுமன்றக் குழுவினர் இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் 30 பேரைச் சந்தித்துப் பேசினர்.

இந்திரா காங்கிரஸ் எம்.பியும் முன்னாள் வெளியுறவு இணை அமைச்சருமான நட்வர்சிங் இலங்கையின் தற்போதைய நிலவரம் பற்றி இலங்கைக் குழுவினருடன் பேசினார்.

இலங்கையில் வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்கள் பணிபுரிகின்றார்கள் என்ற கூற்றை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா முழுமையாக மறுத்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!

பி. ஐ. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.



# உதயன்

22 - 7 - 1990 ஞாயிற்றுக்கிழமை



பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: பி. ஐ. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.


## யுத்தம் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக மாறி வருகிறதே!

### நாடாளுமன்றத்தில் வாசுதேவ

கொழும்பு ஜூலை 22
விடுதலைப்புலிகளை அடக்க இராணுவத்தை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இது தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான யுத்தமாக மாறி வருகிறது.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

அப்போது உரையாற்றிய ஐக்கிய சோஷலிச அணி எம்.பி வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

வடக்கு - கிழக்கில் இன்று அரசு யுத்தம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கிறது. கண்டவுடன் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அவசரகாலச் சட்டத்தின் துணையுடன் தான் இன்றைய அரசு உயிர் பிழைத்து வருகிறது. அவசரகாலச் சட்டம் முடிய, அரசின் ஆயுளும் முடிந்துவிடும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் பற்றி இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ கூறியது எமக்குத் தெரியும் சண்டை நடைபெறும் பகுதிகளை பிடித்துக்கொள்வது கஷ்டம் என்று அவர் கூறியிருக்கிறார்.

**கொப்பேகடுவவின் கருத்து**

இறுதியாக அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே தீர்வைக் காண முடியும் என்பது கொப்பேகடுவவின் கருத்தாகும்.

வன்செயல்களில் ஈடுபடும் முதல் எதிரி பிரபாகரன் அல்லர். பிழையான முடிவுகளை எடுத்து வரும் இந்த அரசும் அதன் தலைவர்களும் தான் வன்செயல்களுக்கான முதல் எதிரிகள்.

**ஐக்கியத்தை அழிக்கும்**

தற்போது நடைபெறும் யுத்தம் நாட்டின் ஐக்கியத்தை அழிக்கும். இந்த யுத்தம் காரணமாக நாட்டின் சகல வளங்களும் வற்றிவிடும். இறுதியில் இது வெளிநாட்டுத் தலையீட்டுக்கே வழி வகுக்கும்.

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரம், மற்றும் ஜனநாயக உரிமைகளை வழங்குவதன் மூலமே விடுதலைப் புலிகளின் சக்தியைத் தோல்வியுறச்செய்யலாம்.

இந்த நாட்டின் இராணுவம் நூறுசதவீதம் சிங்களவர்களைக் கொண்டது.

சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் தான் விடுதலைப் புலிகளுடன் இனிப்பேச்சுக்கள் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

**புலிகளுடன் பேசத் தேவையில்லை**

விடுதலைப் புலிகளுடன் நமக்குப் பேச்சுத் தேவையில்லை. தமிழ் பேசும் பகுதிகளில் மக்கள் சக்தியை நாம் கட்டி எழுப்பவேண்டும்.

இராணுவத்தைப் பயன்படுத்தி அரசு நடத்தும் இந்த யுத்தம், வெளிநாட்டுத் தலையீட்டால் நாட்டைப் பிரிப்பதில் தான் முடியும்.

ஹக்மனையைச் சேர்ந்த தயாரத்ன என்பவர் இலங்கையை மீண்டும் பொறுப்பேற்கும்படி எலிஸபெத் மகாராணிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஐக்கியதேசியக் கட்சி நாட்டை அழித்து வருவதாக அவர் காரணங் காட்டி இருக்கிறார்.

அரசாங்க தரப்பிலிருந்து: அவர் ஒரு பைத்தியக்காரனாக இருக்கவேண்டும்.

திரு. நாணயக்கார: இந்த அரசாங்கம் பைத்தியக்காரத்தின் எல்லைக்குத் தான் துரத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அம்பாறையில் இனமோதல்கள் இடம்பெற்றதாக நான் அறிகின்றேன். நூற்றுக்கணக்கானோர் அதனால் பாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

இப்படி திரு. வாசுதேவ நாணயக்கார கேட்டார். (ஒ-எ)

## ஆசிரியர்களின் ஜூன் மாத சம்பளம் மேலும் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ். மாவட்டத்தில்உள்ள ஆசிரியர்களுக்கு ஜூன்மாதச் சம்பளம் வழங்குவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு ஜூன்மாதச் சம்பளத்தை வழங்குவதற்கு 2 கோடி 70 லட்சம் ரூபா தேவை என்று கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அரச அதிபர் ஊடாக கல்வி அமைச்சிடம் கேட்டிருந்தார்.

ஆனால் இதற்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை கல்வி அமைச்சுச் செயலாளரிடம் இருந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு கிடைத்த தகவலின்படி, யாழ். அரச அதிபருக்கு ஜூன்மாதச் சம்பளம் தொடர்பாக பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும், பணிப்பாளரை அவருடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கல்விப் பணிப்பாளர் அரச அதிபர், வங்கி அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்புகொண்டபோதும், இதுவரை பணம் எதுவும் அனுப்பப்படவில்லை என்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்துநேற்றுகல்வி அமைச்சுடன் பணிப்பாளர் தொடர்புகொண்டுள்ளார். [இ-3]

## மன்னார் அரச அலுவலர்கள் மீண்டும் செல்ல முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 22
மன்னார் மாவட்டத்தில இருந்து இடம்பெயர்ந்து வந்த அரச ஊழியர்கள் மீண்டும் வேலைக்குச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளதாகத் தெரிகிறது.

மன்னாரில் நெருக்கடி நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்த அதிகாரிகளில் பலரும் அங்கு சென்று பணிபுரியத் தயாராக உள்ளனர் என்றும்-

அந்த வகையில் அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வாரம் செல்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் அங்கு சென்று வேலை செய்ய உதவுமாறு அவர்கள் சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு நேற்று வரை பலன் கிடைக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார்.

கேரதீவில் அடிக்கடி நடந்து வரும் விமானத் தாக்குதல்களும், ஆனையிறவில் நிகழும் மோதல்களும் மன்னார் அலுவலர்களின் பிரயாணத்தை இடைநிறுத்தி விடுகின்றன. விடத்தல் தீவு வரை கூடப் போவதற்கு போக்குவரத்துச் சாத்தியம் இல்லாமல் இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-3)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நவரத்தினம்

கொக்குவிலைச் சேர்ந்த நாகலிங்கம் நவரத்தினம் (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் யாழ். கச்சேரி) 19-07-90 இல் கொழும்பில் காலமானார். இவர் ஜீவரத்தினம் (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி) இன் அன்புக் கணவரும்; Dr. விஜயபாஸ்கரன் (பின்லாந்து), பகீரதன் (கட்டிட திணைக்களம், மன்னார்.) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். பற்குணம் (இளைப்பாறிய ஆளணி முகாமையாளர்C.T.B.), அருந்ததி (கனடா) ஆகியோரின் அன்புத் தமையனும்; Dr. திருமதி தியாகலிங்கம் (நியூசிலாந்து), திருமதி விவேகானந்தா, சிவநாதன், சிவபாலன், (குவைத்) சிறிகரன் (கனடா), திருமதி பற்குணம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று கொழும்பில் 22 - 07 - 90 நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

ஆனைக்கோட்டை றோட்,
கொக்குவில் மேற்கு.

(13796)


## காரைநகரில் பொம்மர் நோட்டம்

காரைநகர், ஜூலை 22
நேற்றுக் காலை 10. 30 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமை அண்டிய பகுதிகளில் பொம்மர் விமானம் ஒன்று சுற்றிச் சுற்றி நோட்டமிட்டது.

இதே வேளை முகாம் பகுதிகளில் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் பீரங்கிவேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமிருந்தன.

## செட்டிகுளத்தில் பொம்மர் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 22
செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த கங்கன்குளம் என்னும் இடத்தில் நேற்று பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நண்பகல் 11. 30 மணியளவில் நடந்த குண்டு வீச்சினால் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர் என அறிய வருகிறது. (அ 9)

## புலிகளுடன் ஹமீத் மீண்டும் பேசுகிறாரா?

### சபையில் லக்ஷமன் கேள்வி

கொழும்பு. ஜூலை 22
"அமைச்சர் ஹமீத் மீண்டும் புலிகளுடன் பேசுவதாக அறிகின்றோம். அவ்வாறாயின் அரசாங்கத்தின் சம்மதத்துடன் தான் அவர் செயற்படுகின்றாரா என்பதை தெளிவுபடுத்துங்கள்.

வடக்கு-கிழக்கில் தற்போது நடைபெற்று வரும் சண்டையை அரசாங்கம் தொடரப் போகின்றதா அல்லது பேச்சுவார்த்தை நடத்தப் போகின்றதா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்."

—இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுந்தார்.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்திய அரசுடன் இலங்கை அரசு மீண்டும் பேசுமா? யாழ். குடாநாட்டைஇலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு இந்தியா ஒரு போதும் இடமளிக்காது. அவ்வாறு செய்தாலும் தமிழ் நாட்டுக்கு அகதிகள் வந்து குவிவதாகவும் விமானங்கள் மூலம் குண்டுகள் போடப்படுவதாகவும் புகார் செய்து கொண்டேயிருப்பார்கள். என்று அவர் கூறினார். (உ)

## நிலாவெளி அகதிகளை பச்சைப்புலிகள் கடத்தினரா?

நிலாவெளியில் உள்ள தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்த 18 பேரை இராணுவத்தினர் கைது செய்தனர் என்றும் -

அவர்களை விடுவிக்குமாறு தேவாலய மதகுரு சென்று கேட்டபோது தாம் கைது செய்யவில்லை என்று தெரிவித்துவிட்டதாகவும்- அறிவிக்கப்படுகிறது.

பச்சைப் புலிகள் (கிறீன் ரைகேர்ஸ்) தான் அவர்களைப் பிடித்துச் சென்றவர்கள் என்றும் தாம் கைதுசெய்யவில்லை என்றும் மதகுருவிடம் இராணுவ முகாமில் இருந்தவர்கள் தெரிவித்தனராம். (அ-9)

## உணவுப் பொருள்களுடன் வாகன அணி ஒருவாறு நேற்று வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 22
மதவாச்சியிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிவரச் சென்ற வாகன அணி பலசிக்கல்களில் சிக்கி, ஒருவாறு நேற்றுக்காலை 11.30 மணியளவில் வந்துசேர்ந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட வாகன அணியில் சென்ற 25 லொறிகளுடன் மேலும் இரண்டு லொறிகள் சேர்ந்துவந்துள்ளன.

அந்த லொறிகள் செஞ்சிலுவைச் சங்கங்களுக்கான பொருள்களை ஏற்றிவந்துள்ளன.

நான்கு லொறிகளில் 480 மூடை அரிசியும், ஏழு லொறிகளில் 750 மூடை மாவும், ஆறு லொறிகளில் 400 மூடை சீனியும் மற்றும் 140 மூடை பருப்பு, விட்டாஸ்பிறே - லக்ஸ்பிறே 400 பெட்டி [ஒரு பெட்டியில் 20 பக்கெட்டுகள்] ஆகியவையும் மருந்துப் பொருள்களும் வந்துசேர்ந்துள்ளன.

செஞ்சிலுவைச் சங்கத்துக்கு மூன்று லொறிகளிலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழுவுக்கு ஒரு லொறியிலும், சர்வோதயத்துக்கு ஒரு லொறியிலும், "கியூடெக்" அமைப்புக்கு இரண்டு லொறிகளிலும் பொருள்கள் வந்துள்ளன.

இதேவேளை சர்வோதயத்துக்கும், செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் இரண்டு லொறிகளில் வந்த பொருள்கள் மடுவில் வைத்து அங்குள்ள அகதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. (உ-3-10)

## யாழ். குடாநாட்டிற்கு மாதாந்தம் 600தொன்மா, 60தொன்சீனி தேவை என்கிறார் அதிகாரி

கொழும்பு, ஜூலை 22
யாழ். குடாநாட்டிற்கு மாதந்தோறும் 600 மெட்ரிக் தொன் மா, 700 மெட்ரிக் தொன் அரிசி, 60 மெட்ரிக் தொன் சீனி தேவைப்படுவதாக உணவு ஆணையாளர் குமார் அபயசிங்கா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குத் தேவையான உணவுப்பொருள்கள் அனுராதபுரம், பொலன்னறுவ, மொனறாகல, அம்பாறை ஆகிய இடங்களில் கையிருப்பில் உள்ளன என்றும்அவர் சொன்னார்.

லொறிகள் மற்றும் கப்பல் மூலமும் உணவுப் பொருள்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் வடக்குக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவர்தெரிவித்தார். [உ-எ]

## ஈழத் தமிழர் படுகொலை; பாரதீய ஜனதா கண்டனம்

தீவிரவாதத்தை அடக்குவது என்ற பெயரில் அப்பாவித் தமிழர்கள் இலங்கையில் கொல்லப்படுவது கண்டிக்கப்படவேண்டியதாகும்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி [illegible] தெரிவித்தார்.

[illegible] தேசிய நிர்வாகக் குழுவின் மூன்று நாள் கூட்டம் நேற்று சென்னையில் ஆரம்பமானது. அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. அத்வானி இப்படித் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினையை எனது கட்சி அனுதாபத்துடனும் கவலையுடனும் அணுகுகின்றது என்றும் அவர் சொன்னார். (உ-எ)

## புங்குடுதீவிலும் சடலம் கரை ஒதுங்கியது

புங்குடுதீவு, ஜூலை 22
நாற்பது வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் கடந்த புதன்கிழமை புங்குதீவு கிழக்கில் கரை ஒதுங்கியது.

சடலத்தின் கழுத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது.

அடையாளம் காணப்படாத இந்தச் சடலம் மடத்துவெளி இளைஞர்களினால் கடற்கரையில் புதைக்கப்பட்டது. சமீபநாட்களில், கடலில் இருந்து கரை ஒதுங்கிய சடலங்களின் எண்ணிக்கை தற்போது 30 ஐ தாண்டியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. [illegible]

## 11 தமிழ் பொலீஸாரை காணவில்லை

கடந்த வார இறுதியில் பாணந்துறையிலிருந்து கண்டிக்கு றிசேர்வ் பொலீஸ் பயிற்சிக்காகச் சென்ற 11 தமிழ்ப் பொலீஸார் காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

## திருமலையில்

கொழும்பு, ஜூலை 22
திருகோணமலையில் பல அலுவலகங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

## 12 தமிழக மீனவர்கள் மீது இலங்கைப் படை தாக்குதல்

சென்னை, ஜூலை 22
புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டணத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 தமிழக மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அவர்களிடமிருந்து 12 பரல் டீசலை ஸ்ரீலங்கா கடற்படையினர் பறிமுதல் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-9]

## தள்ளாடியில் கடும் சண்டை! படையினர் ஐவர் மரணம்!!

யாழ்ப்பாணம், ஜூலை 22
நேற்று தள்ளாடியில் இருந்து முள்ளிக்குளம் நோக்கி இருபது வாகனங்களில் சென்ற இராணுவ அணி மீது 10 ஆம் கட்டையில் வைத்து விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும், மேலும் பலர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்பகுதியில் தொடர்ந்து சண்டை இடம்பெற்று வருவதாகவும்-

காயமுற்ற படையினர் ஹெலிக்கொப்டர்களில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப் பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## ஆனையிறவு உப்பளத்தில் இராணுவப் படை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
குறிஞ்சாத்தீவில் தரையிறக்கப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஆனையிறவு உப்பளத்தில் தற்காலிக முகாமொன்றை அமைத்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

முகாம் அமைத்திருக்கும் இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் அறியவருகிறது.

ஆனையிறவு உப்பளத்தில் உப்புமால்களிற்கு இடையிலும், உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் விடுதி, மற்றும் ஆனையிறவு ரயில் நிலையம் ஆகிய பகுதிகளிலேயே இராணுவம் முகாமிட்டுத் தங்கியுள்ளது.

இதேவேளை ஆனையிறவு ரயில் நிலையப் பகுதியில் மேலும் இராணுவத்தினர் ஹெலிமூலம் இறக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## ஆறு தமிழ்....

ஒன்று கூடிப் பேசினார்கள்.

தாம் பிரிவினையை எதிர்ப்பதாகவும், அதற்குப் பதிலாக ஐக்கிய இலங்கை என்ற கட்டுக் கோப்புக்குள் கூடிய தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதாகவும் இந்த ஆறு அமைப்புகளினதும் பிரதிநிதிகள் கூறியதாக பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது.

வடக்கு, கிழக்கில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலை குறித்தும் அதைத் தணிப்பதற்கான வழி வகைகள் குறித்தும் அவர்கள் நேற்று ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு நிலைமை குறித்து இக்குழுக்கள் கூட்டாக ஜனாதிபதியை சந்திக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ( உ-எ)

## 40 பயணிகள் பலியாகினர்

லக்னோ, ஜூலை 22
உத்தரப் பிரதேச மாநிலத்தில் வாரணாசியில் ஒரு பஸ் ஆறு ஒன்றில் விழுந்ததில் குறைந்தது 40 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (அ-9)


## அறிவித்தல்

1. வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் சகலரையும் 25.7.1990 (புதன்கிழமை] புளியங்குளம் மத்திய மருந்தகத்தில் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

2. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சகலரும் உடன் தத்தமது நிலையங்களுக்குச் செல்லவும். தமது நிலையங்களுக்குச் செல்ல இயலாதவர்கள், அதற்கு அண்மையிலுள்ள நிலையத்திலோ அல்லது தற்காலிகமாக புளியங்குளம் மத்திய மருந்தகத்தில் இயங்கும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையிலோ சமுகந்தரவும்.

கே.மாணிக்கம்,
பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்,
வவுனியா.
[13681]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org